நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : உயர்நிலை

## Level : Advanced

***June 2013***

வினாக்கள் : 60

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**வினாக்கள்: 1-15 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

ராமனின் ஆட்சிக் காலத்தில் ஒருநாள் சிம்மாசனத்தில் ராமன் அமர்ந்திருந்தபோது, அவனுடைய மோதிரம் கழன்று கீழே விழுந்துவிடுகிறது. விழுந்த மோதிரம் பூமியைத் துளைத்துக்கொண்டு சென்று, மறைந்துவிடுகிறது. ராமன் தன் காலடியில் அமர்ந்திருந்த அனுமனை அழைத்து, மோதிரத்தை எடுத்து வரும்படி சொல்கிறான். உடனே, அனுமனும் தன் உருவத்தை மாற்றிக்கொண்டு, பூமியைத் துளைத்து உள்ளே செல்கிறான்.

பூமியின் உள்ளே போகப்போக நீண்டுகொண்டே இருக்கிறது. முடிவில், பாதாள ராஜனின் அரண்மனைக்கு வந்து சேர்கிறான். பாதாள ராஜன் அவனை வரவேற்க, ராமனின் மோதிரத்தைத் தேடி வந்ததை அனுமன் சொன்னதும், தனது சேவகனிடம் ஒரு தட்டைக் கொண்டு வரச் சொல்கிறான் பாதாள ராஜன்.
அந்தத் தட்டில் ஆயிரக்கணக்கான மோதிரங்கள் இருக்கின்றன. எல்லா மோதிரமும் ராமனுடையது போன்றே உள்ளது. இது என்ன குழப்பம் என்று அனுமன் திகைக்க, “இதில் எது ராமனுடைய மோதிரமோ அதை எடுத்துக்கொண்டு போ” என்று தட்டை அவன் முன் நீட்டுகிறான் பாதாள ராஜன்.

அனுமன், “தன்னால் அடையாளம் கண்டு கண்டுபிடிக்க முடியவில்லை” என்றதும், “இந்தத் தட்டில் உள்ள மோதிரங்கள் அளவு ராமர்கள் பூமியில் தோன்றியிருக்கிறார்கள். எப்பொழுதெல்லாம் ஒரு ராமனின் அவதாரம் முடிவுக்கு வருகிறதோ, அப்போது அவரது மோதிரம் கழன்று கீழே விழுந்துவிடும். அதைச் சேகரித்து வைப்பது எனது வேலை” என்கிறான் பாதாள ராஜன்.
கர்நாடக மாநிலத்தில் வழங்கப்படுவதாக மானுடவியல் அறிஞர் ஏ கே ராமானுஜம் மேற்கோள் காட்டும் இக்கதை ஒவ்வொரு ராமனுக்கும் ஒரு ராமாயணம் இருக்கிறது என்று தெரிவிக்கிறது.

இராமாயணத்தில் இப்படி என்றால் மகாபாரதம் எத்தனை விதமானதாக இருக்கக்கூடும்? இந்தியாவில் எத்தனை கோடி மக்கள் இருக்கிறார்களோ, அத்தனை விதமான மகாபாரதம் இருக்க முடியும். காரணம், ஒவ்வொரு மனிதனும் ஒருவிதத்தில் மகாபாரதக் கதையைப் புரிந்து வைத்திருக்கிறான். தனக்குத் தெரிந்த விதத்தில் அதை மற்றவர்களுக்குச் சொல்லி வருகிறான்.

மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் இந்திய மக்களின் ஆழ்ந்த நம்பிக்கைகள், அறக்கோட்பாடுகள், இயற்கையை எதிர்கொண்ட விதம் மற்றும் உள்ளார்ந்த பயம், சந்தோசம், குடும்ப அமைப்பின் உருவாக்கம், இந்திய சமூகத்தின் வளர்ச்சி, நகரங்கள் உருவாதல் என்று பல்வேறு தளங்களை கதைகளின் வழியாக வெளிப்படுத்துகின்றன. இவ்வகையில் இந்தியாவின் புராதன அமைப்பை இந்த இரு நூல்களிலும் காணமுடிகிறது.

***(எஸ் ராமகிருஷ்ணன் எழுதிய கதாவிலாசம் என்ற நூலில் எழுதாக் கதை என்ற அத்தியாயத்தின் ஒரு பகுதி)***

அடுத்த பக்கத்தில் தொடரும்

1. சிம்மாசனம் என்ற வடமொழிச் சொல்லின் தமிழ்ச் சொல்.
   (a) அரியாசனம்
   (b) அரியணை
   (c) சிங்கணை
   (d) சிங்காசனம்

2. கர்நாடக மாநிலம் தமிழ் நாட்டுக்கு
   (a) கிழக்கே உள்ளது
   (b) வடக்கே உள்ளது
   (c) தென் மேற்கில் உள்ளது
   (d) வட மேற்கில் உள்ளது

3. ஆயிரக்கணக்கான என்பது?
   (a) சரியாக ஆயிரம்
   (b) ஆயிரத்துக்கு மேலே
   (c) எண்ணிக்கையற்ற
   (d) ஆயிரத்துக்கு கீழே

4. அனுமன் என்பவன் ராமனின்
   (a) உறவினன்
   (b) அண்ணன்
   (c) அடிமை
   (d) பக்தன்

5. கதையின்படி பாதாள உலகம் என்பது?
   (a) பூமியின் கீழே உள்ளது.
   (b) பூமியில் கிழக்குப் பக்கத்தில் உள்ளது.
   (c) பூமியின் மேலே உள்ளது.
   (d) பூமிக்கு மேற்குப் பக்கத்தில் உள்ளது.

6. மகாபாரதம் இராமாயணம் என்பன?
   (a) இரட்டைக் காவியங்கள்.
   (b) ஐம்பெருங் காப்பியங்களில் இரண்டு.
   (c) இதிகாசங்கள்.
   (d) மேற்கூறிய எவையுமல்ல.

7. புராதனமானது என்பது?
   (a) புதுமையானது.
   (b) இடைக் காலத்துக்குரியது.
   (c) பழமையானது.
   (d) நவீனமானது.

அடுத்த பக்கத்தில் தொடரும்

8. உள்ளார்ந்த என்பது?
   (a) வெளியே உள்ள
   (b) உடலில் உள்ள
   (c) உட்பொதிந்துள்ள
   (d) இவை எல்லாம் சரியானவை.

9. மேற்கோள் காட்டுதல் என்பது?
   (a) கோள்களைக் கொண்டு போய்க்காட்டுதல்.
   (b) மேலே வானத்தில் உள்ளவற்றை விரிவாகக் குறிப்பிடுதல்.
   (c) வேறொரு இடத்திலிருந்து பெற்றதைத் தனது கட்டுரையில் அப்படியே குறிப்பிடுதல்.
   (d) இவை எல்லாமே தவறானவை.

10. ராமருடைய மோதிரம் எங்கே சென்று மறைந்தது என்று கதையில் குறிப்பிடப்படுகிறது.
   (a) சிம்மாசனத்தின் கீழே
   (b) அனுமாரின் கால்களுக்குக் கீழே
   (c) அருகில் உள்ளவாரின் இருக்கையின் கீழே
   (d) நிலத்துக்குக் கீழே

11. மானிடவியல் என்பது?
   (a) மானைப் பற்றிப் படிப்பது.
   (b) விலங்கினம் பற்றிப் படிப்பது.
   (c) மனித இனம் பற்றிப் படிப்பது.
   (d) பறவையினம் பற்றிப் படிப்பது.

12. ராமரின் மோதிரம் பற்றிய கதை எந்த மாநிலத்தில் வழங்கப்பட்டு வருகிறது.
   (a) தமிழ் நாடு
   (b) கேரள மாநிலம்
   (c) கர்நாடக மாநிலம்
   (d) ஆந்திரா மாநிலம்

13. ஏன் பலவிதமான மகாபாரதங்கள் இருக்கிறன என்று கூறப்படுகிறது?
   (a) வியாசர் பலவிதமான மகாபாரதங்களை எழுதினார்.
   (b) மக்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக மகாபாரதம் எழுதியுள்ளனர்.
   (c) மகாபாரதம் காலப் போக்கில் பலவித மகாபாரதங்களாக உருவாகிவிட்டது.
   (d) மகாபாரதத்தை ஒவ்வொருவரும் தமக்கு விளங்கிய வகையில் மற்றவருக்கு கூறி வருகிறார்கள்.

14. பயம் என்ற வடமொழிச் சொல்லுக்குரிய சரியான தமிழ்ச் சொல்.
   (a) பருவம்
   (b) அச்சம்
   (c) கோழை
   (d) இவை எவையுமல்ல.

அடுத்த பக்கத்தில் தொடரும்

15. சந்தோசம் என்றால்?

(a) இன்பம்
(b) இனிமை
(c) மகிழ்ச்சி
(d) துன்பம்

**வினாக்கள் 16-20: பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க.**

16. சங்க இலக்கியங்களின் இரண்டு வகை இலக்கியங்கள்.

(a) அறநூல்களும் நீதிநூல்களும்
(b) எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும்
(c) இதிகாசங்களும் காவியங்களும்
(d) இவை ஒன்றுமல்ல

17. நாநிலங்களில் கடலும் கடல் சார்ந்த இடம்.

(a) மருதம்
(b) முல்லை
(c) நெய்தல்
(d) குறிஞ்சி

18. “அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று ஆகும்” என்ற கூற்றைக் கொண்ட இலக்கியம்.

(a) மணிமேகலை
(b) சீவகசிந்தாமணி
(c) சிலப்பதிகாரம்
(d) திருக்குறள்

19. தமிழுக்கும் அமுதென்று பேர் என்று ஆரம்பமாகும் பாடலைப் பாடியவர்.

(a) மகாகவி பாரதியார்
(b) தேசிக விநாயகம்பிள்ளை
(c) பாரதிதாசன்
(d) இராமலிங்க சுவாமிகள்

20. இராமாயணத்தைத் தமிழில் எழுதியவர்.

(a) திருத்தக்க தேவர்
(b) இளங்கோ அடிகள்
(c) சீத்தலைச் சாத்தனார்
(d) கம்பர்

**வினாக்கள் 21-25 : கீழே தரப்படும் இலக்கண வினாக்களுக்கு விடை தருக.**

21. ஆள் என்ற வினையடியின் இறந்தகால ஆண்பால் வினைமுற்று.
    (a) ஆள்தான்
    (b) ஆள்டான்
    (c) ஆண்டான்
    (d) ஆண்டன்

22. பெறு என்ற வினையடியின் நிகழ்கால பெண்பால் வினைமுற்று.
    (a) பெற்றாள்
    (b) பெறுவாள்
    (c) பெறுகிறாள்
    (d) பெற்றுகிறாள்

23. வா என்ற வினையடியின் எதிர்கால பலர்பால் வினைமுற்று.
    (a) வருபார்கள்
    (b) வந்தார்கள்
    (c) வருகிறார்கள்
    (d) வருவார்கள்

24. கந்தன் என்ற பெயர்ச்சொல்லின் இரண்டாம் வேற்றுமை.
    (a) கந்தனுக்கு
    (b) கந்தனுடைய
    (c) கந்தனால்
    (d) கந்தனை

25. அழகு என்ற சொல்லின் பெயரடை (Adjective).
    (a) அழகாக
    (b) அழகான
    (c) அழகுக்கு
    (d) அழகின்

**வினாக்கள் 26-28 : பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.**

| |
|---|
| (a) குரல் அறிதல் |
| (b) சொல் செயலாக்கி |
| (c) பக்க வடிவமைப்பு |
| (d) புவி நிலக் காட்டி |

26. GPS

27. Word Processor

28. Voice Recognition

**வினாக்கள் 29-30 : பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க.**

| |
|---|
| (a) மறைமலை அடிகள் |
| (b) அப்துல் கலாம் |
| (c) சி.வி.ராமன் |
| (d) சந்திராயன் அண்ணாதுரை |

29. நோபல் பரிசு பெற்ற தமிழ் விஞ்ஞானி.

30. அரசுத் தலைவராக பதவி வகித்த தமிழ் விஞ்ஞானி.

**வினாக்கள் 31-35 : பின்வரும் பட்டியல் ஒவ்வொன்றிலும் ஒன்று வேறுபட்டு நிற்கிறது. அதனைக் கண்டு பிடியுங்கள்.**

31.
(a) தொடருந்து
(b) பேருந்து
(c) மூடுந்து
(d) ஈருருளி

32
(a) வெந்தயம்
(b) மிளகு
(c) சீரகம்
(d) கடலை

33
(a) சிரிப்பு
(b) மகிழ்ச்சி
(c) ஆனந்தம்
(d) அழுகை

34
(a) சூரியன்
(b) சந்திரன்
(c) பூமி
(d) காற்று

35
(a) முறுக்கு
(b) மைசூர்பாகு
(c) அல்வா
(d) லட்டு

அடுத்த பக்கத்தில் தொடரும்

**வினாக்கள் 36-40 : கீழ்வரும் தமிழ் எழுத்துகள் பற்றிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

36. தமிழில் உள்ள உயிர் எழுத்துகள் மெய் எழுத்துகளின் (தனித்தனியான) தொகை?
    (a) 12, 18
    (b) 13, 19
    (c) 12, 19
    (d) 13, 17

37. இடையின எழுத்துகள் என்பன?
    (a) க், ச், ட், த், ப், ற்
    (b) ங், ஞ், ண், ந், ம், ன்
    (c) ய், ர், ல், வ், ழ், ள்
    (d) ழ், ன், ஞ், ண், ட், ற்

38. தமிழில் உள்ள மொத்த எழுத்துகள் எத்தனை?
    (a) 246
    (b) 247
    (c) 248
    (d) 245

39. பின்வருனவற்றில் வினாச் சொல் எது?
    (a) அது
    (b) உது
    (c) இது
    (d) ஏன்

40. பூ செடி என்ற இரண்டு சொற்கள் எவ்வாறு இணைகின்றன?
    (a) பூம்செடி
    (b) பூசெடி
    (c) பூஞ்செடி
    (d) பூக்செடி

**வினாக்கள் 41-50 : பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

41. சிட்னியில் வாரத்திற்கு நான்கு மணி நேரம் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் அரச வானொலி?
    (a) அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
    (b) இன்பத் தமிழ் வானொலி
    (c) விசேட ஒலிபரப்புச் சேவை
    (d) தமிழ் முழக்கம்

42. கல்கி கிருஷ்ணமூர்த்தியால் எழுதப்பட்ட கதையை அடிப்படையாகக் கொண்ட திரைப்படம்?

(a) வீரபாண்டிய கட்டப்பொம்மன்
(b) சிவகாமியின் செல்வன்
(c) பார்த்திபன் கனவு
(d) பாவை விளக்கு

43. தமிழ் இலக்கியங்கள் இணைக்கப்பட்டுள்ள இணைய தளம்?

(a) மதுரை புரஜெக்ட்
(b) தமிழ்முரசு.கொம்
(c) புதினம்.கொம்
(d) தமிழ்மணம்.நெற்

44. சங்கமருவிய காலத்தில் எழுந்த நூல்களின் எண்ணிக்கை?

(a) இருபது
(b) பதினெட்டு
(c) பத்தொன்பது
(d) இருபத்தொன்று

45. இந்த வருடம் எந்த நாட்டில் நடைபெற இருக்கும் பொதுநலவாய நாடுகள் மகாநாடு பிரச்சினைக்குரியதாக இருக்கிறது?

(a) இந்தியா
(b) இலங்கை
(c) பங்களாதேஷ்
(d) மலேசியா

**வினாக்கள் 46-50: பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை ஊகித்து விடைத்தாளில் குறிப்பிட்ட இலக்கத்திற்கு எதிரே எழுதுக.**

நட்சத்திரக் குழந்தைகள் என்ற கதையில் ரோகிணி என்ற ஆறு வயதுச் சிறுமியும் அவளது அப்பாவும் ஒரு நாள் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நட்சத்திரங்களுக்கு அப்பா இருக்கிறாரா என்று (46)**__________________________** கேட்கிறாள் கடவுள்தான் நட்சத்திரங்களுக்கு அப்பா என்று பதில் சொல்கிறார் அவர். உடனே சிறுமி கேட்கிறாள், கடவுள் உங்களைப் போல அழகாக இருப்பாரா அப்பா? அவரும் கடவுளைப்போல அழகானவர் இந்த உலகத்திலேயே வேறு யாரும் (47)**_____________________________** என்கிறார்.

ரோகிணி அதை ஆமோதிப்பவள் போல சொல்கிறாள். அதனால்தான் நட்சத்திரங்கள் இத்தனை அழகாக ஜொலிக்கின்றன. அப்போது ஒரு நட்சத்திரம் எரிந்து கீழே (48)**_____________________________** அதைக் கண்ட சிறுமியின் தந்தை, யாராவது பொய் சொல்லிவிட்டால் ஒரு நட்சத்திரம் இப்படி உதிர்ந்து விழுந்துவிடும் என்கிறார். ரோகிணியும் அதை ஏற்றுக் கொள்கிறாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு ஓர் இரவில் வானத்திலிருந்து எரிந்து விழும் (49)**_____________________________** ஒன்றைக் கண்டு வேதனை தாங்க முடியாமல் ரோகிணி அழுகிறாள். அப்பா சமாதானப்படுத்தும்போது, நம் ஊரில் யாரோ (50)**_____________________________** சொல்கிறார்கள் அப்பா. ஒரு நட்சத்திரம் உதிர்ந்து போனால் கடவுள் எவ்வளவு வேதனைப்படுவார். அதை நினைத்துத்தான் வருத்தப்படுகிறேன் என்கிறாள் குழந்தை. குழந்தையின் மனதும், வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத துக்கமும் கொண்ட கதை இது பொய் சொல்வதனால் நட்சத்திரங்கள் உதிர்ந்துவிடும் என்பது உண்மையாக இருந்தால், இன்று வானில் ஒரு நட்சத்திரம்கூட இருக்காது. ஆனாலும் இக்கதையை வாசிக்கும் போது கடவுளுக்காக வருத்தப்பட குழந்தைகளைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

***(மணிக்கொடி இதழை நடத்திய பி. எஸ் ராமையாவின் நட்சத்திரக் குழந்தைகள் என்ற கதை – எஸ் ராமகிருஷ்ணனின் கதாவிலாசத்தில் இருந்து எடுக்கப்பட்ட பகுதி)***

அடுத்த பக்கத்தில் தொடரும்

**வினாக்கள் 51-60: பின்வரும் இரண்டு வினாக்களில் ஏதாவது ஒன்றுக்கு விடை எழுதவும். விடை 75 சொற்களுக்குக் குறையாது இருக்கவேண்டும்.**

1. 2009 ஆம் ஆண்டு வன்னியில் இடம் பெற்ற போரில் சிக்கிக் கஷ்டங்களை அனுபவித்த உங்கள் பாட்டி இப்போது யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார். அவருக்கு ஆறுதல் கூறி அவரை உற்சாகப்படுத்தும் வகையில் அவருக்கு ஒரு **கடிதம்** எழுதுக.

## அல்லது

2. நீங்கள் வாசித்த கதை அல்லது பார்த்த திரைப்படம் ஒன்று பற்றி உங்கள் **விமரிசனத்தை** எழுதவும்.